## வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டம் (நெல்சிப்) 2014

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் முன்னேற்றச் செயற்திட்டத்தின்(நெல்சிப்) 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையேயான 2009 நவெம்பர் 08 ஆந் திகதிய 4728-எல்கே இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் II பீ பிரிவினது 2 ஆம் நிரல் மற்றும் 2014 மே 08 ஆந் திகதிய டீஎவ்013787 இலக்க மானிய உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு, காலம்

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் தற்போதைய மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சும் செயற்திட்டத்தின் நிறைவேற்று மற்றும் அமுலாக்கல் முகவர்களாகும். இலங்கை வடக்கு, கிழக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களது உள்ளூர் உட்கட்டமைப்புச் சேவை விநியோகத்தை கணக்களிதகைமையுடனும் ஏற்றுக்கொள்ளத்தக்கவாறானதாகவும் முன்னேற்றுவது செயற்திட்டத்தின் நோக்கம் ஆகும். நிதியளிப்பு உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,997.50 மில்லியனுக்கு நிகரான 106.30 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும். கடனின் ரூபா 5.500 மில்லியனுக்கு நிகரான 50 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மானியத்தின் ரூபா 2,537.5 மில்லியனுக்கு நிகரான 20.30 மில்லியன் அமெரிக்க டொலர்களும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடாகியது. 2010 மே 01 ஆந் திகதி தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த செயற்திட்டமானது அதனை 2015 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிறைவேற்றப்பட்டியலிடப்பட்டிருந்தது.

### 1.3 செயற்திட்ட நடவடிக்கைகள்

ஐந்து கூறுகளின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்ட நடவடிக்கைகள் கீழே சுருக்கித் தரப்பட்டுள்ளன.

உறுப்பு 1 : உட்கட்டமைப்புச் சேவை விநியோகம்

உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மானியத்தை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்குதல்.

உறுப்பு 2 : கணக்களிபொறுப்பை நிர்வாக ரீதியாக்குதல்

வெளிப்படையானதும் சுதந்திரமானதுமான வருடாந்த நிதிசார் கணக்காய்வு, சமூக மற்றும் தொழில்நுட்பக் கணக்காய்வு என்பவற்றை உள்ளூராட்சி நிறுவனங்கள் மேற்கொள்வதற்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்குதலும் நிலுவையாக உள்ள நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வு விடயங்களைக் கையாளலும். கல்வி மற்றும் தொடர்பாடல் இயக்கத்தை மேற்கொள்ளலும் அபிவிருத்தியும் மற்றும் முறைமைகளையும் செய்முறைகளையும் அபிவிருத்தி செய்தல் வாயிலாக உள்ளூராட்சி நிறுவனங்களது செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்தல்.

உறுப்பு 3 : ஆற்றலைக் கட்டியெழுப்பல்

திட்டமிடல், வரவு, செலவுத் திட்டமிடல், நிதிசார் முகாமைத்துவம், கொள்வனவு, செயற்திட்ட முகாமைத்துவம் ஆகிய துறைகளில் உள்ளூராட்சி நிறுவனங்களது ஆற்றலை அதிகரிக்கச் செய்தலும் கணக்காய்வுகளை வினைத்திறனுடனும் நேரப்படியும் மேற்கொண்டு செயற்திட்ட அமுலாக்கல் கூறுகளது இயலுமையைப் பலப்படுத்துதல்.

உறுப்பு 4 : மதிப்பீடும் மதிப்பாய்வும்

உள்ளூராட்சி நிறுவனங்களது நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கு விரிவான முறைமையொன்றை நிறுவி உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பாக மதிப்பாய்வையும் பகுப்பாய்வையும் மேற்கொள்ளல்.

உறுப்பு 5 : செயற்திட்ட முகாமைத்துவம்

செயற்திட்ட முகாமைத்துவக் கூறுகளது ஆற்றலைப் பலப்படுத்தல்.

## 1.4 நிதிசார் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப நிதிசார் கூற்றுக்களைத் தயாரித்துச் சமர்ப்பித்தல் மற்றும் பிழைகள் அல்லது மோசடி காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அல்லாத நிதிசார் கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையென முகாமைத்துவம் கருதுகின்ற அவ்வாறான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

## 1.5 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல்

என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமெனக் கருதப்படும் அவ்வாறான செவ்வையினையும் இப்பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிசார் கூற்றுக்களில் காணப்பட்ட செலவினம் செயற்திட்டதால் பேணப்பட்ட உயரளவு நிதிசார் அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக கணக்கணிக்கம் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன் மற்றும் மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதி உடன்படிக்கை மற்றும் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா? என்பதும்

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கைகளில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட டொலர் கணக்கினது பற்றுதல்களும் மீளளிப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்களிலும் ஏடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டனவா என்பதும்

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான றடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவான என்பதும் ஆகும்.

## 1.6 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிசார் கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக்கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களிலிருந்து எழுதுகின்ற சீராக்கங்களின் தாக்கங்களைத் தவிரவும்,

(அ) செயற்திட்டமானது 2014 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதி அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், 2014 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான விசேட டொலர் கணக்கினது பற்றுதல்களும் மீளளிப்புகளும் செயற்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்களிலும் ஏடுகளிலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பது 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்தினத்தில் உள்ளவாறு இலங்கை மத்திய வங்கியின் கணக்கீட்டுப் பதிவுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டனவா என்பதும்

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈ) கடன் மற்றும் மானிய உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கு ஏற்ப மீளளிப்பிற்கான விண்ணப்பங்களை ஆதரிக்குமாறு நியாயபூர்வமாக நம்பிக்கை அளிக்கக்கூடியனவாக இருந்தன என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) நிதியளித்தல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடு

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 79 உள்ளூராட்சி நிறுவனங்களால் 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,585 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்பொருட்டு அவ்வுள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைளுக்கென வழங்கப்பட்ட தொகை ரூபா 3,300 மில்லியனாகும். எவ்வாறாயினும், விடுவிக்கப்பட்ட மொத்தத் தொகையும் நிதிசார் கூற்றுக்களில் கிரயச் செலவினமாகக் காட்டப்பட்டுள்ளது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதியளிப்பு உடன்படிக்கையின் 2 ஆம் பட்டோலையினது 1.3.4 பிரிவின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டிய மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்ட மதிப்பீடு செயற்திட்டத்தால் தயாரிக்கப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது ரூபா 461.99 மில்லியனுக்குப் கொள்வனவு செய்யப்பட்ட சிவில் வேலைகள் மற்றும் பொருட்கள் தொடர்பாக பொது நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 364(3) க்கமைய பெறுமதி சேர்வரி மீதான விரிவான கூற்றுக்கள் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது வடமாகாண செயற்திட்ட அலுவலகத்தால் நிதிப் பிரமாணம் 138 க்கமைய ரூபா 119.89 மில்லியன் கூட்டுத் தொகையுடைய ஏழு கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் சான்றுதிப்படுத்தப்படாதிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதிக செயலாற்றல்

### 3.1 நிதிப் பயன்பாடு

மீளாய்வாண்டின்போதும் 2014 டிசெம்பர் 31 வரையுமான நிதியளிப்பு மற்றும் நிதிப்பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரம் கிழே காட்டப்பட்டுள்ளது.

| தோற்றுவாய் | நிதியளிப்பு மற்றும் மானிய உடன்படிக்கைப் பிரகாரம் நிதியளிப்பிற்கு உடன்பாடாகிய தொகை | | பயன்படுத்திய நிதி 2014 ஆம் ஆண்டின் போது | | 2014 டிசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|
| | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் | ரூபா மில்லியன் |
| கடன் | 50.00 | 5,500.00 | 12.34 | 1,608.97 | 49.91 | 6,185.00 |
| மானியம | 20.30 | 2,537.50 | 8.05 | 1,167.69 | 8.08 | 1,167.69 |
| இலங்கை அரசாங்கம் | 34.00 | 3,740.00 | 0.61 | 67.66 | 14.06 | 1546.57 |
| சமுதாய உதவுதொகை | 2.00 | 220.00 | 2.71 | 298.82 | 4.64 | 510.35 |
| | 106.30 | 11,997.50 | 23.71 | 3,143.14 | 76.69 | 9,409.61 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்ட 20.30 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தில் 8.08 மில்லியன் அமெரிக்க டொலரே 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. விரிவான திட்டமெதுவும் இன்மையால் எஞ்சிய 12.22 மில்லியன் அமெரிக்க டொலரை மிகுதி 01 ஆண்டிற்குள் பயன்படுத்துவது சந்தேகத்துக்கிடமாகியுள்ளது.

(ஆ) பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், உள்ளூராட்சி நிறுவனங்களின் மதிப்பீடு மற்றும் மதிப்பாய்வுத் தேவைகளுக்கென ஒதுக்கப்பட்ட ரூபா 40.5 மில்லியன் மற்றும் ரூபா 43.5 மில்லியன் என்பவற்றுள் முறையே ரூபா 14.10 மில்லியன் மற்றும் ரூபா 22.47 மில்லியன் என்பன 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

சேகரிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 9,950 மில்லியனுக்கு நிகரான 90 மில்லியன் அமெரிக்க டொலர் 79 உள்ளூராட்சி நிறுவன இடங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான கூட்டுத்தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளது பௌதீக முன்னேற்றம் கீழே தரப்பட்டுள்ளது.

| அபிவிருத்தி நடவடிக்கை | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட முன்னேற்றம் | 2014 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு எய்தியவை | எய்தப் பெற்ற சதவீதம் |
|---|---|---|---|
| நுழைவு வீதிகளது அபிவிருத்தி | | | |
| - தார் பூசுதல் | 865 கி.மீ | 379 கி.மீ | 43 |
| - கொங்கீரிட் பதித்தல் | 135 கி.மீ | 259 கி.மீ | 191 |
| பூங்கா / சந்தை முதலியவற்றை நிர்மாணித்தலும் சிறு பட்டினங்களை அபிவிருத்தி செய்தலும் | 405 எண்ணிக்கையிலானவை | 171 எண்ணிக்கையிலானவை | 42 |
| வடிகால் / கழிவகற்றல் | 245 கி.மீ | 41 கி.மீ | 16 |
| கழிவு அகற்றல் முறைமை | 66 எண்ணிக்கையிலானவை | 01 எண்ணிக்கையிலானது | 1.5 |
| கிராமிய நீர் வழங்கல் திட்டம் | 439 எண்ணிக்கையிலானவை | 22 எண்ணிக்கையலானவை | 0.5 |
| கிராமிய மின்சாரம் | 187 கி.மீ | 23 கி.மீ | 12 |

எஞ்சிய வேலையை நிறைவேற்றவும் முடிவடைய வேண்டிய வேலையை நிறைவேற்றவும் உள்ள காலத்தைக் கருத்திற்கொள்ளுமிடத்து செயற்திட்டக் காலப்பகுதிக்குள் செயற்திட்ட நோக்கங்களை எய்தமுடியுமா என்பது சந்தேகத்துக்கிடமாக உள்ளது.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

---------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடமாகாணத்தின் வல்வெட்டித்துறை நகரசபை, வவுனியா தெற்கு சிங்கள பிரதேசசபை, காரைநகர் பிரதேச சபை என்பன மேற்கொண்ட 4 வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கான கொடுப்பனவுகளைக் கணக்காய்வில் பரிசீலித்தபோது, கூறுவிலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட கட்டண வீதம் பின்னர் மாற்றஞ் செய்யப்பட்டிருந்தமை தெரிய வந்ததுடன் ஒப்பந்தகாரருக்கு ரூபா 4.42 மில்லியன் கொடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது.

(ஆ) வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்கையில் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுத் தலைவராகச் செயற்திட்டப் பொறியியலாளர் பணியாற்றி ஒப்பந்தங்களைத் தனது கம்பனிக்கே வழங்கியும் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) மானன்டிச் சந்தை மற்றும் வர்த்தகப் பல்கூட்டுத் தொகுதி நிர்மாண வேலைக்கான ஒப்பந்தத்தில் மேலதிக வேலைகளுக்கென ரூபா 1.14 மில்லியன் மாற்றக் கட்டளைக்கான குறித்த அதிகாரிகளது அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக மானன்டிச் சந்தையின் நிர்மாண வேலைகள் உப ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்தகாரரால் ஒப்பந்தத்தை நிறைவேற்ற முடியாமையால், 2012 ஏப்ரல் 10 ஆந் திகதி முடிவடையவிருந்த ரூபா 11.5 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்ட இலக்கத்துறை பிரதான வீதியிலிருந்து புன்னியடி துறைமுக வீதி வரையிலான வீதி நிர்மாண ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கிழக்கு மாகாணத்தின் வெருகல் பிரதேச சபை ரூபா 2.3 மில்லியன் முற்பணப் பிணைமுறியைக் காசாக்குவதற்கு குறித்த காலத்திற்குள் நடவடிக்கை எடுக்கவில்லை. மேலும், ஒப்பந்தம் கைவிடப்பட்டதால் செயலாற்றல் பிணைமுறியும் காசாக்கப்படவில்லை.

(உ) இவற்றை விட, 3 மாதகாலத்திற்குள் வேலையை முடிக்க வேண்டுமென 2012 ஏப்ரல் 03 ஆந் திகதியன்று ரூபா 17.6 மில்லியன் கிரயத்திற்கு வழங்கப்பட்ட புன்னியடி துறைமுக வீதி மீள் நிர்மாண ஒப்பந்தமும் வேலையை ஆரம்பிக்காமையால் கைவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வேலையை ஆரம்பிப்பதற்கான முற்பணமாகிய ரூபா 3.53 மில்லியன் முற்பணமும் பிணைமுறியும் பிணைமுறி முடிவடையும் காலத்திற்குள் காசாக்கப்படவில்லை. இதற்குப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

### 3.4 பயன்படுத்தப்படாத / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

திருகோணமலையின் மூதூர் பிரதேச சபை மற்றும் வெள்ளை மணல் சந்தை வர்த்தகப் பல்கூட்டுத் தொகுதியில் உள்ள 27 கடைகள் 3 ஆண்டுகளுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 முன்னைய கணக்காய்வு அறிக்கைகளில் சுட்டிக்காட்டப்பட்டபோதும் தீர்த்து வைக்கப்படாதிருக்கும் கணக்காய்வு விடயங்கள்

2013 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களுக்கமைய, ஒரு நகர சபையாலும் 9 பிரதேச சபைகளாலும் 19 சந்தர்ப்பங்களில் சிவில் வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்தகாரர்களுக்கு அவர்களது பெறுமதிசேர் வரிக் கொடுப்பனவிற்கான பதிவுகளைச் சரி, பிழை பார்க்காது ரூபா 16.2 மில்லியன் பெறுமதிசேர் வரியாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாகக் குறித்த நபர்களிடமிருந்து கொடுப்பனவை அறவிடுவதற்கு செயற்திட்ட முகாமைத்துவக்கூறு அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை.